## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழக்கு | : | OS.235/2020 | கிராமம் | | சூரியமணல் |
| சாட்சி | : | வா.சா–1 | வட்டம் | : | உடையார்பாளையம் |
| பெயர் | : | பாண்டியன் | வயது | : | 62 |
| த/பெ | : | மணி | தொழில் | : | விவசாயம் |

2025–ம் ஆண்டு அக்டோபர் 07–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி. வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

1. 13.06.2013 தேதியிட்ட பதிவுசெய்யப்படாத கிரைய உடன்படிக்கையின் அசல் வா.சா.ஆ.1.
2. 14.12.2018 தேதியிட்ட எனது தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2.
3. மேற்படி அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3.

4. 19.12.2018 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4.

5. 03.11.2014 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5.

**வா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.**

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.